30 MAR 2021
திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி ஜி.அருணா (க/பெ. (லேட்) திரு.தே.தங்கமணி) தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை

அரசாணை (2ப) எண்.110 நாள் : 13.10.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, புரட்டாசி – 27

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.64402/நிபி8/1/2018, நாள். 18.10.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.

******

**ஆணை:-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் கடிதத்தில், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவனையில் உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.தே.தங்கமணி என்பவர் 15.07.2014ல் பணியிடையே மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 20.06.1985 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.06.2043 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மனைவி தனக்கு பணிநியமனம் வேண்டி 20.03.2015 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 20.06.1985 என்றும், திருமதி ஜி.அருணா என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி 24.12.2018 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 24.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திருமதி ஜி.அருணா, தட்டச்சர் என்பவரின் பணியினை, வரன்முறை செய்வதற்கு ஏதுவாக அன்னார் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்த நாளான 20.03.2015-க்கு பின்னர் தட்டச்சர் பதவிக்கான தொழில்நுட்ப கல்வி தகுதியில் (2016) தேர்ச்சி பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-யை தளர்த்தி தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 24.12.2018 முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.14685/க்யூ1/2020-1, நாள் 01.10.2020 மற்றும் அ.சா.எண்.24866/ஜி2/2020-1, நாள் 08.10.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை-600 006.
✓திருமதி ஜி.அருணா, தட்டச்சர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-600 018.
நகல்
தொழிலாளர்மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை,சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

ந.க. எண்.14-24/ கூ1 /2021 நாள் .3.2021

ஜெ. [illegible] 15/10/2020
பிரிவு அலுவலர்

அனுப்பப்படுகிறது.

30/3/2021

இளநிலை நிர்வாக அலுவலர்
அரசு மருத்துவமனை,
திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்.

15/10/2020

பெறுநர்:
திருமதி G. அருணா, தட்டச்சர்,
அரசு மருத்துவமனை, திருப்பத்தூர்

நகல்
ம. கோ.